**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 | Special Issue 1 | December 2024 | eISSN: 2456-5148

களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

‘

# The Glory of Naladiyar

**M. Geetha**
*Assistant Professor, Department of Tamil, Annai Mira College of Engineering and Technology, Arapakkam. Ranipet District. Tamil Nadu.*

Abstract:
Throughout its history, Tamil literature has been graced by countless poets, from the ancient Sangam era to contemporary times. A prominent collection within this rich tradition is the *Patheenenkeezhkanakku*, or eighteen minor works, which occupy a crucial position in shaping ethical and moral thought. Thiruvalluvar's Thirukkural stands as a testament to universal ethical principles, and closely following in its esteemed footsteps is Naladiyar. Written in the *venpa* poetic form, traditionally used for conveying moral lessons, Naladiyar is the foremost of the eleven ethical texts within the *Patheenenkeezhkanakku*. The very name "Naladiyar" signifies its structure, with each verse comprising four lines. The aim of this initial exploration is to delve into the significance and enduring merit of Naladiyar.

# நாலடியாரின் பெருமைகள்

**மு. கீதா**
*உதவி பேராசிரியர் தமிழ்த்துறை), அன்னை மிரா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி அரப்பாக்கம். (ராணிப்பேட்டை மாவட்டம்.*

**முன்னுரை** :

தமிழன்னைக்கு இலக்கியங்களைப் படைத்து மகுடம் சூட்டிய புலவர்கள் பலர் உண்டு. சங்க காலம் முதல் இக்காலம் வரை அப்புலவர்கள் எண்ணறறவர்களாக உள்ளனர். நீதி கூறும் இலக்கிய வரிசையில் பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் சீரியஇடத்தைப் பெற்றுள்ளன. உலக மக்கள் அனைவருக்கும் திருவள்ளுவர் நீதி உரைப்பதில் தன்மையானவர் ஆகிறார், அத்திருக்குறளை அடுத்து நீதி நூல்களில் இரண்டாமிடம் பெறும் நூல் நாலடியார் ஆகும். எதையும் கூறும்போது வெண்பாக்களில் கூறுவது வழக்கம். எனவே நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள அறநூல்கள் பதினொன்றில் முதலாவாகக் தனிப்பாடல் ஒன்றில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகளைக் கொண்டுள்ளதால் நாலடியார் என்று கொள்ளலாம். அந்நாலடியாரின் பெருமைகளை ஆய்வதே இம்முதல் இயலின் நோக்கமாகும்.

**தமிழ்மொழியின் தொன்மை** :

தமிழ் மிகவும் தொன்மையான மொழி ஆகும். தமிழ் என்னும் சொல்லுக்கு "இனிமை " என்று பொருள். தமிழை இயற்றமிழ் என்றும் இசைத்தமிழ் என்றும் நாடகத் தமிழ் என்று மூன்றாகப் பிரித்து " முத்தமிழ் " என்று சேர்த்தும் அழைப்பர். அமிழ்தினும் இனிய தமிழைப் "பைந்தமிழ் "என்றும் " செந்தமிழ் " என்றும் " கொடுந்தமிழ் " என்றும் "நற்றமிழ் " அழைப்பர்.

" தமிழுக்கு அமுதென்று பேர் "(பாரதிதாசன் கவிதைகள், பா. 20)
என்றும்
"இனிமைத் தமிழ்மொழி எமது "(பாரதிதாசன் கவிதைகள், பா. 23)
என்றும்
" எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழன்று சங்கே முழங்கு " (பாரதிதாசன் கவிதைகள், பா.27)
என்றும் பாரதிதாசன் பாடியுள்ளார்.
" செந்தமிழ் நாடென்னும் போதி னிலே - இன்பத்
தேன் வந்து பாயிது காதினிலே "(பாரதியார் கவிதைகள், பா. 1)
என்றும்

" சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே "(பாரதியார் கவிதைகள், பா 12)
என்றும் பாரதியார் பாடியுள்ளார்.

" அரியா சனம் உனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழ் "( தமிழ்விடுதூது, கண்ணி. 62)
என்றும்

" தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே என் முத்தமிழே
புத்திக்குள் உண்ணப்படும் தேனே "(தமிழ்விடுதூது, கண்ணி.68)
என்றும்

" இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்த அமிழ்தம் என்றாலும் வேண்டேன் " (தமிழ்விடுதூது,கண்ணி. 152)
என்றும் தமிழ் விடு தூதின் கண்ணிகளின் வழி இனிய தமிழ்மொழியின் பெருமைகளை இனிதே உணரலாம்.

பழந்தமிழ் நாட்டில் அமிழ்தினும் இனிய தமிழ்மொழியைப் பேணி வளர்க்கவும் செம்மையான தமிழ் இலக்கிய இலக்கணங்களை உருவாக்கவும் முன்பே தோன்றியுள்ள நூல்களை அழிந்து போகாமல் பாதுகாக்கவும் தோன்றியதே " தமிழ்ச் சங்கம் " ஆகும்.

**முச்சங்கம்** :

தமிழை வளர்க்கக் கடவுள்களும், புலவர் பெருமக்களும், அரசர்களும் தமிழாய்ந்ததன் விலைவால் தோன்றியதே முச்சங்கங்கள் ஆகும். முதற்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்று அச்சங்கங்களைப் முப்பிரிவாக பிரிப்பர்.

KALANJIYAM

**முதற் சங்கம்**

549 புலவர்கள் தலைமைப் புலவர்களாய் அமர்ந்து 4449 புலவர்கள் கூடித் தமிழாய்ந்தனர். இவர்களால் முதுநாரை, முதுகுருகு, களவியல்உரை முதலான நூல்கள் பாடப்பட்டன. முதற்சங்கப் புலவர்கள் ஆராய்ந்த இலக்கண நூல் அகத்தியம் ஆகும். இச்சங்கம் 4440 ஆண்டுகள் இருந்தது. சங்கம் இருந்த இடம் தென்மதுரை ஆகும். கடல் சீற்றத்தில் அழிந்தது என்றும் கூறப் படுகிறது.

தமிழை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் புலவர் பெருமக்கள் முழுமூச்சுடன் கலந்தாய்வு செய்து எழுதப்பட்ட இலக்கணமாகிய அகத்தியம், கடல் கொந்தளிப்பால் அழிந்தது என்றும் அகத்தியத்தை இயற்றிய புலவர் அகத்தியர் என்றும் கூறப்படுகிறது.

**இடைச்சங்கம்** :

59 புலவர்கள் தலைமைப் புலவர்களாகப் பங்கேற்க 59 பாண்டிய மன்னர்கள் இடைச்சங்கத்தைப் பேணிக் காத்தனர். 3700 புலவர்கள் கூடித் தமிழ் ஆய்ந்தனர்.இப்புலவர்களின் இலக்கணம் அகத்தியம், தொல்காப்பியம், இசை நுணுக்கம், மாபுராணம், பூதப் புராணம் ஆகியவை ஆகும்.அகத்தியரும் இவர்தம் மாணக்கர் தொல்காப்பியர் உள்ளிட்ட 59 புலவர்களும் தலைமைப் புலவர்கள் ஆவர். இச்சங்கம் 3700 ஆண்டுகள் இருந்தது. சங்கம் இருந்த இடம் காபடபுரம் ஆகும். இச்சங்கமும் கடலால் அழிவுற்றது.

**கடைச்சங்கம்** :

49 பாண்டிய மன்னர்கள் கடைச்சங்கத்தைப் பேணிக் காத்தனர். 49 புலவர்கள் தலைமைப்புலவர்களாய் இருக்க 449 புலவர்கள் தமிழ் பாடினர். இப்புலவர் பெருமக்களால் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல் முதலான எட்டுத்தொகை நூல்கள் பாடப்பட்டன. கடைச்சங்க புலவர்களின் இலக்கண நூல்களாக அகத்தியம், தொல்காப்பியம் போன்ற நூல்கள் விளங்கின. இச்சங்கம் 1850 ஆண்டுகள் இருந்தது. இருந்த இடம் உத்தர மதுரை ஆகும்.இம்முச்சங்கங்களைக் கற்பனை என்று ஏற்க மறுத்தவர்களும் கூடச் சான்றுகளின் கூற்றால் உண்மை என்று ஒப்புக்கொள்கின்றனர்.

**காலப்பகுப்பு** :

பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு வகையான நூல்கள் தோன்றித் தமிழன்னைக்கு அழகு சேர்த்தன. இக்காலங்கலைச் சங்க காலம், சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், தற்காலம் என்று வகைப் படுத்தலாம். இவற்றுள் சங்க காலமும் சங்கம் மருவிய காலமும் இலக்கியத்தில் உன்னத இடத்தைப் பிடித்துள்ளன.

**சங்க காலம்** :

தரணியில் மூத்த மொழியாய்த் தோன்றித் திகழ்ந்தமையால் தொன்மையான மொழி தமிழ்மொழி என்று அனைவராலும் பாராட்டப்பட்டு மணிமகுடத்தில் ஒரு மாணிக்கக்கல்லாய் ஒளிவீசக் காண்கிறோம்.

இந்தியாவில் பன்னிரண்டு திராவிட மொழிகள் உள்ளன என்பது கால்டுவெல் கூற்று. அவற்றுள் சிறந்த மொழி தமிழ் ஆகும். திராவிட மொழிகள் இருபது என்பது அண்மைக்காலத்து மதிப்பீடு. தமிழ்மக்கள் வாழ்ந்த வாழ்க்கையைக் கற்பனைக் கலப்பின்றிப் படம் பிடிக்கும் அற்புத கண்ணாடியே சங்க இலக்கியம் ஆகும். சங்க காலத்தின் காலம் கி. மு. 500 முதல் கி. பி. 100 ஆகும். இக்காத்தில் தோன்றிய நூல் ‘ பாட்டும் ‘ ‘ தொகையும் ‘ என்று கூறப்படும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும் இப்பதினெட்டு நூல்களையும் பதினெண் மேற்கணக்கு என்று அழைப்பர்எட்டுத்தொகையில் உள்ள ஒவ்வொரு நூலும் பல பாடல்களின் தொகுப்பாகும். பத்துப் பாட்டு என்பது பத்து நெடும்பாடல்களின் தொகுப்பாகும்.

" ஐம்பது முதலா ஐந்நூறு ஈறா
ஐவகைப் பாவும் பொருள்நெறி மரபில்
தொகுக்கப் படுவது மேல்கணக் காகும். "(பன்னிரு பாட்டியல், 342)
" அகவலும் கலிப்பா அம்பரி பாடலும்
பதிற்று ஐந்து ஆதி பதிற்று ஐம்பதி ஈறா
மிகுத்துடன் தொகுப்பன மேல்கணக்கு "(பன்னிரு பாட்டியல், 346) பதினெண் மேற்கணக்கு என்பது ' பெரிய ' என்று பொருள். அடியளவில் மிக்கவை. ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகியவற்றால் பாடப்பட்டவை. இப்பாக்களைக் கொண்டு பாடல் எழுதுவது கடினமாக இருந்தாலும் சிரமம் பார்க்காமல் பிற்காலச் சந்ததியினருக்குப் பயன்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் உருவாக்கினர்.

**சங்கம் மருவிய காலம்** :

கி. பி. 100 முதல் 600 - க்கு இடைப்பட்ட காலம் சங்கம் மருவிய காலம் ஆகும். இக்காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் திருப்புமுனை ஏற்படுத்தியது எனலாம்.ஏனெனில் இதற்கு முந்தையக் காலம் வரையில் நூற்றுக்கும் குறைந்த அடிகளைப் பெற்ற எட்டுத்தொகையும்,நூற்றுக்கும் மேற்பட்ட அடிகளைப் பெற்ற பத்துப்பாட்டையும் பாடிய புலவர்கள் மத்தியில் ஓர் உணர்ச்சி மிகுந்த நிகழ்ச்சியைத் தொடர்ச்சியாக எழுதித் தொடர்நிலைச் செய்யுளாக எழுதிய முதல் காப்பியம்

சிலப்பதிகாரம் ஆகும். காப்பியம் பெற்ற மொழியே உயர்ந்த மொழி எனலாம். இதனால் தமிழ் உயர்நிலையை அடைந்தது. சிலப்பதிகார ஆசிரியர் நிகழ்ச்சிக்குறிய ஒசை நயத்திற்கேற்ப வேறு வேறு பாக்களைப் பயன்படுத்தி புதுமை சேர்த்துள்ளார். இக்கதையின் தொடர்ச்சியாக எழுந்த காப்பியம் மணிமேகலை ஆகும். இவ்விரண்டும் கதையமைப்பில் பிணைவதால் " இரட்டைக் காப்பியம் " என்று புலவர் பெருமக்களால் அழைக்கப்படுகிறது. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய மற்றொரு பொக்கிஷம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். இக்காலத்தை இருண்ட காலம் என்றும் அழைப்பர்.

**இருண்ட காலத்து இலக்கியங்கள்** :

தமிழ்நாடு முழுவதையும் அடிமைப் படுத்திய களப்பிரர் காலமாகிய இருண்ட காலத்தில் நூல்கள் ஆங்கங்கே கண் சிமிட்டும் விண்மீன்கள் போல் உதயமாயின. வெண்பாக்களின் தொகுதியும் அளவு குறைவாகப் பெற்று பாடல்களின் எண்ணிக்கை 50 முதல் 500 வரை பெற்று வரும் தொகை நூல் கீழ்க்கணக்கு ஆகும்.

" அடி நிமிர்பு இல்லாச் செய்யுள் தொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும் "(பன்னிரு பாட்டியல்,348)

மேல், கீழ் என்பது உயர்வு தாழ்வு குறிப்பன ஆகும். பதினெட்டு நூல்களைத் தொகுத்து அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் பாடுவது கீழ்க் கணக்காகும். கீழ் என்பதற்குச் சிறிய என்று பொருள் அடியளவில் குறைந்தவை. பதினெட்டு நூல்களில் நீதி நூல்கள் 11, அகப்பொருள் நூல்கள் 6, புறப்பொருள் 1 ஆகும். மக்களுக்காகவே உருவானதே நீதி நூல்கள் எனலாம்.இவ்வாறு பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு வகையான இலக்கியங்கள் தோன்றிய வண்ணமே இருந்து வந்துள்ளன. நூல்கள் சற்று முடங்கிய காலம் என்று பார்த்தால் களப்பிரர் காலம் எனலாம்.

" நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி - மாமுலம்

இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய ஆம்கீழ்க் கணக்கு "
என்ற பாடல் பதினெண் கீழ்க்கணக்கில் அமைத்துள்ள நூல்களைச் சுட்டுகிறது.

**நாலடியார்** :

நீதி நூல்களுள் தலைசிறந்தது திருக்குறள் ஆகும். திருக்குறளில் கூறப்படும் கருத்துக்கள் ஒரு நாட்டிற்கோ, ஒரு சமயத்திற்கோ, ஒரு இனத்திற்கோ, ஒரு காலத்திற்கோ மட்டும் உரியன அல்ல. எல்லா நாட்டினர்க்கும் எல்லா சமயத்தினர்க்கும் எல்லா இனத்தார்க்கும் உரிய பொதுவானவை ஆகும். திருக்குறளைப் போன்றே நாலடியாரும் பொதுவான நீதி நூலக உள்ளதால் திருக்குறளுக்கு அடுத்து வைத்து பேசப் படுகிறது.

**நூற்சிறப்பு** :

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதலாவதாக வரும் நூல் நாலடியார் ஆகும். இது அறநூல் என்பது மட்டுமன்று அறிவு நூலும் என்பதே சாலப் பொருந்தும்.
" பாலு நெய்யு மூடலுக் குறுதி
வேலு வாளு மடலுக் குறுதி
ஆலு வேலும் பல்லுக் குருதி
நாலு இரண்டும் சொல்லுக் குறுதி 'என்றும்

" பழகுதமிழ் சொல்லருமை நாலிரண்டில் "
என்றும் "நாலடி இரண்டடி கற்றவ னிடத்து
வாயடி கையடி அடிக் காதே "
என்றும் வரும் பழமொழிகள் திருக்குறள் மற்றும் நாலடியார் பற்றிப் பேசுவதாகும். இதில் இரண்டு என்பது திருக்குறளையும் நான்கு என்பது நாலடியாரையும் குறிப்பதாகும்.

பிறமொழிப் புலவரின் பாராட்டில் ஜி. யு. பாப்பும் ஒருவர். இவர் நாலடியார் பாடல்களில் மனதைப் பறிக் கொடுத்தவர் ஆவார். இவர் நாலடியார் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவர் "இத்தகைய சிறந்த ஒழுக்கத்தில் மிகப் பற்றுள்ள மக்களாவார் தனிப்பட்ட பேரின்பத்தை எய்துவார்கலென நான் கருந்துகிறேன். அன்னாரை இவ்வழியில் நிலைநாட்டியது திருக்குறளும் நாலடியுமே ஆகும். " என்று நாலடியார் பதிப்புரையில் கூறியிருப்பது நூலுக்கு மேலும் பெருமை சேர்ப்பதாய் உள்ளது.

**சிறப்பு** :

பாவகையுள் சிறப்பான எளிய பாவான வெண்பாவால் இயற்றுவது சிறப்பாகக் கருதப்பட்டு இன்னிசை வெண்பாவினாலும் நேரிசை வெண்பாவினாலும் அமைந்த
நாலடியார் மேலும் சிறப்புப் பெற்று விளங்கியது. அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களைக் கொண்டு 40 அதிகாரங்களில் எடுத்துக் காட்டுடன் கருத்தை வலியுறுத்திக் கூறுவது நாலடியாரின் சிறப்பாகும்.
" சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல் " (நன்னூல், 13)
இந்நூற்பாவிற்கேற்ப நாலடியார் அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பாகும்.

**செல்வம்** :

செல்வத்தின் நிலையாமை மிக அழகாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது செல்வம் நிலையில்லாதது. சீமானை ஏழையாக்கும், செல்வனை வறியாக்கும். அறுசுவையுடன் உண்டு மகிழ்ந்த நிலை மாறி வறுமையால் வாட நேரிடும். பிச்சை எடுக்கவும் நேரிடும் என்பதை நான்கு வரிகளில் அழகான நாலடியாரில் கூறப்பட்டுள்ளது.

" அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்து கூழ்எனின், செல்வம் ஒன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று "(நாலடியார், 1)

அடுத்தவரை நெருங்க விடாது தாளும் உண்டு மகிழாது பாடுப்பட்டுச் சேர்ந்த தேனைப் பிறர் எடுத்துச் செல்ல விடாமல் தானே அழிந்து சாகும். அதுபோல் செல்வத்தைப் பகிர்ந்து கொண்டு வாழதார் வான்முட்டும் வரை இருந்தாலும் அவர்களுக்கும் உதவாது அடுத்தவர்க்கும் பயன்படாமல் அழிந்து போகும் என்று நாலடியார் நயமாக எடுத்துக் சொல்கிறது.

"உடாஅதும் உண்ணாதும் தம்உடம்பு செற்றும்
கெடாஅ நல்லறமும் செய்யார் - கொடஅது
வைத்தீட்டி னார்இழப்பர் : வான்தோய் மலைநாட
உய்த்தீட்டும் தேனீக் கரி "(நாலடியார், 10)

**சினம் - விளக்கம்** :

சினம் என்பது கோபத்தைக் குறிக்கும். கோபத்தை உச்சியில் வைத்து நாம் பாராட்டக் கூடாது. சினம் வரும்போழுதே அதை அடக்கத் தெரிந்திருந்தால் வேண்டும். ஒருவன் எந்தத் தீங்கும் தன்னைச் சேராமல் இருக்க வேண்டும் என்றால் சினம் வராமல் காத்துக் கொள்ளுவதே சிறந்தது. இல்லையெனில் தன்னையே அழிந்துவிடும். இதனை

" நகையும் யுவகையும் கொள்ளுஞ் சினத்தின்
பகையும் உள்வோ பிற "(குறள், 304)

என்று திருவள்ளுவர் கூறுகிறார். இத்தகைய சினத்தை அடக்க வேண்டும் சினம் இல்லையேல் நன்மைகள் பல பெறலாம் என்று இவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

" மதித்திறப் பாரும் இறக்க மதியா
மிதித்திறப் பாரும் இறக்க - மிதித்தேறி
ஈயுந் தலைமேல் இருத்தலால் அஃதரிவார்
காயும் கதமின்மை நன்று. " (நாலடியார், 61)

.

மதிக்கத்தக்க பெரியோரைச் சிலர் மதிக்காது இருப்பதைக் கண்டு கோபம் கொள்ளாமாலிருப்பதே உயர்ந்த குணமாகும். சிறிய ' ஈ ' கூட உயர்ந்த மனிதர் தலை மேல் ஏறி மிதிப்பதைப் போலத்தான் மதிக்காதவர்களையும் நினைக்க வேண்டும் என்று அருமையான உவமை வழி நாலடியார் விளக்குகிறது.

**நட்பு** :

நட்பின் சிறப்பை நாலடியார் அழகாகக் கூறுகிறது. யானை தன்னை வளர்த்த பாகன் தனக்கு தீங்குச் செய்தால் அதை மனதில் கொண்டு பின்னொரு நாளில் அவனைக் கொன்றுவிடும். ஆனால் நாய் தன்னை வளர்த்தவன் தன்மீது எறிந்த வேல் உடம்பிலே பாய்ந்த நிலையிலும் அவன் செய்த உதவியை நினைத்துப் பார்த்து வாலைக் குழைந்து நிற்கும். எனவே யானை போன்றவரின் நட்பை விட வேண்டும், நாய் போன்றவரின் நட்பைக் கொள்ள வேண்டும் என்று நயமாகக் கூறுகிறது.

" யானை யனையவர் நண்பெரீஇ நாயனையார்

கேண்மை செழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய். “ (நாலடியார், 61)

**கல்வி** :

கல்வியின் சிறப்பை நாலடியார் அழுத்தந் திருத்தமாக கூறுகிறது.வாரி விடப்பட்ட கூந்தல் அழகும் நன்கு உடுத்தப்பட்ட வண்ண உடை அழகும் அழகுக்காக முகத்தில் பூசும் மஞ்சளும் ஒருவருக்கு உண்மையில் அழகு தராது. உள்ளத்தால் நல்லவர்களாய் வாழும் நடுவுநிலை தவறாத வழிச் செலுத்தும் கல்வியே ஒருவருக்குச் சிறந்த அழகூட்டும் அணிகலனாகும்.

“ குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.”(நாலடியார், 131)

ஆமையைக் கொல்ல அடுப்பை முட்டி, உழைப்பானையில் நீர் ஊற்றி அதில் ஆமையைப் போடுவர். ஆமை தான் சாகப்போவது உணராமல் இளஞ்சூடான நீருக்குள் ஆட்டம் போட்டு மகிழும். பறவைகளைப் பிடிக்க வேடன் வேலைவிரிப்பதைப் போல கொலைகாரனாகிய எமன் நம்மைக் கொண்டு போக நேரமும் காலமும் பார்த்துக் கொண்டிருப்பதை அறியாமல், நாம் மகிழ்ச்சி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

“ கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை
நிலைமறியா தந்நீர் படிந்தா யற்றே,
கொலைவல் பெருந்கூற்றம் கோள்பார்க்க ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு. “ (நாலடியார், 331)

**உலக உண்மைகள்** :

உவமைகளைப் போன்றே உலக உண்மைக் கருத்துக்களும் நாலடியாரில் இடம் பெற்றுள்ளன. அதன் சிறப்புகளைக் கீழே காணலாம். நம் முன்னோர்கள் கூறிய சாதாரண நடைமுறைப் பேச்சுக்கு எழுத்தோவியம் கொடுத்து கற்போரின் மனதை மகிழ்விப்பதுடன் சிந்திக்கவும் தூண்டும் சொற்கள் நாலடியாரில் அதிகம் இருக்கின்றன.

1. கூற்றுவன் உலக உயிர்களைப் பாசக்கயிற்றால் பிடித்துக் கொண்டு செல்வான். (நாலடியார், 5)
2. இப்பிறவியில் அடிமையாகி உண்பதற்கு முற்பிறவியில் பிறர் மனைவியை விரும்பிச் சேர்த்த பாவம் காரணம் ஆகும். (மேலது, 85)
3. நீரினும் நுண்ணியது நெய் : நெயினும் நுண்ணியது புகை ஆகும். (நாலடியார், 282)
4. நாகம் இடிக்கு அஞ்சும். (நாலடியார், 104)
5. காட்டுப்பசுவைக் கொன்ற வேங்கை இடத்துப்பக்கம் வீழ்ந்தால் உண்ணாமல் போய்விடும். (நாலடியார், 300)
6. விலாங்குமீன் தன்னைப் பிடிக்க வரும் பாம்பிற்கு ஒரு புறத்தைக் காட்டி மற்றொரு புறத்தை மீனுக்கு காட்டும்.(நாலடியார், 375)
7. அன்றில்பறவை இணை பிரியாது வாழும்.(நாலடியார், 376)
8. வானவில்லின் தோற்றமும் மறைவும் அறிதலரிது. நாலடியார், கடவுள் வாழ்த்து )
9. புலி உணவு கிடைக்காதபோது சிறு தவளையையும் தின்று உயிர் வாழும். (நாலடியார், 193)

**முடிவுரை** :

தமிழைத் தாயாய் உருவகித்த உயர்மொழி தமிழ்மொழி ஆகும். தமிழ்மொழி தொன்மையான மொழி ஆகும். அமிழ்தினும் இனிய தமிழ்மொழியை இனிது வளர்க்கப் புலவர் பெருமக்கள் பாடுபட்டதன் விளைவால் தோன்றியதே சங்கம் ஆகும். மூன்று சங்கங்களை அமைத்துத் தமிழ் வளர்த்த வரலாறு பற்றி அறிய முடிகிறது. பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு வகையான நூல்கள் தோன்றியதையும் காண முடிகிறது. இக்காலங்களில் பல்வேறு வகையாக பிரித்ததையும் அறிய முடிகிறது. சங்க காலத்தில் தோன்றிய பதினெண் மேற்கணக்கு நூல்களையும் இதேபோல் சங்கம் மருவிய காலத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய வரலாற்றையும் காண முடிந்தது. இந்நூல்களில் நீதி சொல்லும் நோக்கில் இயற்றப்பட்ட நூல்களே அதிகம் ஆகும். திருக்குறளைப் போன்று நாலடியரும் முப்பால்களாகப் பிரித்துள்ளனர்.நாலடியார் வெண்பாவால் இயற்றப்பட்ட நீதி நூல் ஆகும். நாலடியார் அறம், பொருள், இன்பம் ஆகிய உறுதிப்பொருள்களை அமுதமாக அள்ளித் தருகிறது. செல்வத்தின் சிறப்பும் செல்வம் நிலையாமையைப் பற்றியும், சினம் பற்றியும் சினத்தினால் வரும் தீங்கு நன்கு அறிய முடிகிறது. நட்பின் சிறப்பை நாலடியார் நயமாய்ச் சொல்கிறது. கல்வியின் சிறப்பையும் நன்கு அறிய முடிகிறது. உலக உண்மைகளைச் சொல்லவும் நாலடியார் தவறவில்லை. இவ்வியலில் நாலடியாரின் பெருமைகளை நன்கு அறிய முடிகிறது.

**பார்வை நூல்கள்** :

1.நாலடியார், ( தெளிவுரை - பொழிப்புரை- அரும்பதவுரை ), உமா பதிப்பகம், மண்ணடி , சென்னை - 1,
2.மகாகவி பாரதியார் கவிதைகள், வி. கரு. இராமநாதன், ஸ்ரீஇந்து பப்ளிக்கேஷன்ஸ், தியாகராய நகர், சென்னை - 17,
3. பாரதிதாசன் கவிதைகள், உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை - 1.
4.இலக்கண வரலாறு பாட்டியல் நூல்கள், ச. அரங்கநாதன், பாலமுருகன் பதிப்பகம், உடையார் பாளையம், திருச்சி.
5. திருக்குறள் தெளிவுரை, மு. வரதராசானார், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிட், திருநெல்வேலி.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.